நாள்: 30.06.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமணி

### <u>கொத்தமல்லி, வெங்காயம் விலை கடும் உயர்வு</u>

**திருவள்ளூர்**:

திருவள்ளூர் மாவட்டத்தில் கொத்தமல்லி, வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக காய்கறிகள் விலை உயர்ந்து வருகிறது. இதில் கொத்தமல்லி விலை கிடுகிடுவென உயர்ந்து ரூ.10-க்கு விற்கப்படுகின்றன.

இதுபோல் வெங்காயம், தக்காளி, பீன்ஸ், அவரை போன்ற காய்கறிகள், கடந்த வாரத்தை விட கடுமையாக விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தற்போது தோட்டப்பயிர்கள் விளைச்சல் குறைவாக உள்ளது.

இதனால் தோட்டப்பயிர்கள் பெரும்பாலும் அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் இருந்தே கொண்டு வரப்படுகிறது. இதன் காரணமாகவே காய்கறிகளின் விலை அதிகரித்து வருகிறது.

சனிக்கிழமை நிலவரப்படி காய்கறிகள் விலை (ஒரு கிலோ): (பழைய விலை அடைப்புக் குறிக்குள்)

வெங்காயம் ரூ.30 (12), தக்காளி ரூ.15 (8), கத்தரி ரூ.16 (8), மாங்காய் ரூ.20 (10), முள்ளங்கி ரூ.20 (12), கருணை ரூ.28 (16), அவரை ரூ.50 (30), பீன்ஸ் ரூ. 60 (40), கேரட் ரூ.40 (20), பீட்ரூட் ரூ.20 (12), முருங்கை ரூ.20 (40), இஞ்சி ரூ.100 (60), பச்சைமிளகாய் ரூ.20 (12).

## <u>உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர வாய்ப்பு</u>

**மதுரை**:

மதுரை மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக பதிவு செய்வதற்கு கணக்கெடுப்புப் பணி கிராம நிர்வாக அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, ஆட்சியர் இல.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பது: இத்திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டவர்கள் திருமணமாகி வெளியூர் சென்றால் நீக்கம் செய்யப்பட வேண்டும். வெளியூர்களிலிருந்து திருமணமாகி வந்தால், உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டும். இறப்பு நிகழ்ந்தால், இறந்தவர் பெயர் நீக்கப்பட வேண்டும். விவசாய வேலை செய்பவர்கள் 18 வயது பூர்த்தியடைந்து விட்டால், உறுப்பினராக பதிவு செய்யப்பட வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர்களால், ஒவ்வொரு மாதமும் முதல் திங்கள்கிழமை தோறும் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் செய்தல் பணியை மேற்கொள்வர். எனவே, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டவர்கள், மேற்கூறிய நிகழ்வுகள் இருந்தால், தங்களுடைய குடியிருப்பு பகுதிகளில் கிராம நிர்வாக அலுவலர்களிடம் தகவல்களை தெரிவித்து உறுப்பினர் பெயர் சேர்த்தல் அல்லது நீக்கம் செய்தல் செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் கிராம நிர்வாக அலுவலர்களால் சரியான கணக்கெடுப்புப் பதிவேடு பராமரிக்க இயலும். தகுதியுள்ள அனைவரும், தங்களுக்குரிய பகுதியிலுள்ள கிராம நிர்வாகஅலுவலரைத் தொடர்பு கொண்டு இத்திட்டத்தில் பயனடையலாம், என தெரிவித்துள்ளார்.

## <u>கோழிப்பண்ணை அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்பு</u>

**விருதுநகர்**:

விருதுநகர் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகள் அமைக்க விரும்பும் பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்: அரசு கோழிப் பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் கோழி வளர்ப்புத் திட்டத்தை

செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் நிகழாண்டில் 50 பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கறிக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு பண்ணை கொட்டகை அமைக்கும் செலவில் 25 சதவீதம் மானியமாக அளிக்கப்படும். இது தவிர நபார்டு வங்கியின் சார்பில் கோழி துணிகர முதலீட்டு நிதியிலிருந்தும் 25 சதவீதம் பின் மானியமாகவும் வழங்கப்பட உள்ளது. அதேபோல், வங்கிகள் மூலம் கடன் பெற்றோ அல்லது சொந்த செலவிலோ அமைத்துக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் 5 ஆயிரம் கோழிகள் கொண்ட பண்ணை அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கிராம ஊராட்சியில் வசிக்கும் விவசாயிகள், தனி நபர் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோர் இதற்கு தகுதியானவர்கள் ஆவார்கள். இவர்களிடம் பண்ணை அமைக்க போதுமான இடம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருக்க வேண்டும். எனவே இத்தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்களும், ஏற்கனவே கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்துக் கொள்ளவும், பண்ணையை விரிவாக்கம் செய்வதற்கு ஆர்வமுள்ளோர் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடையலாம். இத்திட்டத்தில் கடந்த ஆண்டு பயன் அடைந்தவர்கள் நிகழாண்டில் பயன் பெற முடியாது.

இதில், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகம் சார்பில் இயங்கும் பயிற்சி மையங்களில் முறையாக பயிற்சி அளிக்கப்படும். அதேபோல், தேர்வு செய்யப்பட்டவர்கள் கட்டாயம் 60 நாள்களுக்குள் கொட்டகை அமைக்க வேண்டும். எனவே மேற்குறிப்பிட்ட தகுதியும் ஆர்வமும் உள்ளளோர் மாவட்ட ஆட்சியரால் அங்கீகாரம் பெற்ற ஒருங்கிணைப்பாளரின் திட்ட மதிப்பீட்டு கடிதம், தேர்வு செய்யப்பட்ட வங்கியிலிருந்து ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுகள் ஆகியவைகளுடன் விண்ணப்பங்களை விருதுநகர் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்சியர் டி.என். ஹரிஹரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**<u>பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 1.02 கோடி மதிப்பில் 3 கிடங்குகள்</u>**

**பெருந்துறை:**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 1.02 கோடி மதிப்பில் 3 புதிய கிடங்குகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கூறினார்.

பெருந்தறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க விவசாயிகளுக்கு சரக்கீட்டுக் கடனுதவிகள் வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். விழாவில் 9 விவசாயிகளுக்கு சரக்கீட்டுக் கடனுதவியாக ரூ. 9 லட்சம் வழங்கி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம் பேசியது:

தமிழக முதல்வர், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ. 93 லட்சம் மதிப்பில் 2 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அவற்றை முதல்வர் திறந்து வைத்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், இந்த ஆண்டு ரூ. 1.02 கோடி மதிப்பில் 3 புதிய கிடங்குகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேங்காய் பருப்பு கௌ்முதல் செய்வதில் இச்சங்கம் சாதனை புரிந்து உள்ளது. இச்சங்கத்தின் மூலமாக எள் அரவை ஆலை அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆண்டு முதல் இச்சங்கத்தின் மூலமாக எள் மற்றும் மக்காச்சோளம் ஆகியவை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்கள் தேங்காய் பருப்பை இச்சங்கத்தில் இருப்பு வைத்து விற்காலம். கிடங்கு வாடகைக்காக ஒரு குவிண்டால் தேங்காய் பருப்புக்கு ரூ. 2.50 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. விவசாயிகள் இச்சங்க கிடங்கில் இருப்பு வைக்கும் கொப்பரைக்கு, அதன் சந்தை மதிப்பில் 70 சதவீதம் சரக்கீட்டுக் கடனாக வழங்கப்படுகிறது என்றார்.

இதில், மாவட்ட வருவாய் அலுவலர் ரெ.சதிஷ், கூட்டுறவு சங்கங்களின் மண்டல

இணைப்பதிவாளர் ராமதாஸ், கூட்டுறவு ஒன்றியத் தலைவர் வெ.தெய்வநாயகம், பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் அருள்ஜோதி செல்வராஜ், பெருந்துறை ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.பெரியசாமி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஏ.கே.சாமிநாதன், வெட்டையன்கிணறு

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் திங்களூர் எஸ்.கந்தசாமி,

பெருந்துறை பேரூராட்சித் தலைவர் சரஸ்வதி துரைராஜ், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சித் தலைவர் ஜானகி குப்புசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 48.83 அடி**

**ஈரோடு**:

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 48.83 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,158 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 4.1 டி.எம்.சி.

**கேரட் விலை கடும் உயர்வு**

**குன்னூர்**:

குன்னூரில் விளைவிக்கப்படும் கேரட்டின் விலை தற்போது கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் அப் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குறித்த காலத்தில் பருவமழை பெய்யாததால், நீலகிரி மாவட்டத்தில் காய்கறி விளைச்சல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, குன்னூர் பகுதியில் கேரட் விளைச்சல் வெகுவாகக் குறைந்துவிட்டது. இதனால் கேரட் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

40 கிலோ கேரட் விலை தரத்துக்கேற்ப ரூ.2 ஆயிரம் முதல் ரூ.2 ஆயிரத்து 400 வரை விற்கப்படுகிறது. இதனால் சில்லரை விலையில் ஒரு கிலோ ரூ.70 வரை

விற்பனை செய்யப்படுகிறது.

**<u>ஜவ்வாதுமலையில் விரைவில் பழத்தோட்டம், தாவரவியல் பூங்கா</u>**

**திருவண்ணாமலை**:

ஜவ்வாதுமலையில் 200 ஏக்கரில் பழத்தோட்டமும், 50 ஏக்கரில் தாவரவியல் பூங்காவையும் அமைப்பதற்கான அறிவிப்பை முதல்வர் ஜெயலலிதா விரைவில் அறிவிப்பார் என்று அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் 2 நாள்கள் நடைபெறும் 17-வது கோடை விழா சனிக்கிழமை தொடங்கியது.

திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத் துறை இணைந்து ஆண்டுதோறும் ஜவ்வாதுமலையில் கோடை விழாவை நடத்தி வருகிறது. கடந்த ஆண்டு நிர்வாகக் காரணங்களால் இவ் விழா நடைபெறவில்லை.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான கோடை விழாவின் தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது. ஜவ்வாதுமலையில் உள்ள வனத்துறை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகித்தார்.

விழாவைத் தொடங்கி வைத்து வேளாண்துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது: அதிமுகவின் நிரந்தர கோட்டையான ஜவ்வாதுமலைக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா பல்வேறு நலத்திட்டப் பணிகளை செய்து வருகிறார்.

ஜவ்வாதுமலையில் 200 ஏக்கரில் பழத்தோட்டமும், 50 ஏக்கரில் தாவரவியல் பூங்காவையும் அமைப்பதற்கான அறிவிப்பை முதல்வர் ஜெயலலிதா விரைவில் அறிவிப்பார் என்றார்.

இதையடுத்து, அரசின் பல்துறை பணி விளக்கக் கண்காட்சியைத் திறந்து வைத்து சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன் பேசியதாவது: சுற்றுலாத்துறை சார்பில் ஜவ்வாதுமலைக்கு பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் ரூ.10 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள் செய்வதற்கான நிதியை ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பார் என்றார்.

பின்னர் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பேசியதாவது:

நாட்டுக்கே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. புதிய மென்பொருள் தயாரிக்கும் மாணவ-மாணவியருக்கு தமிழக அரசு ரூ.2 லட்சம் பரிசு வழங்குகிறது. பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியருக்கு மடிக்கணினி தந்து கல்வியில் புரட்சியை ஏற்படுத்தியவர் முதல்வர் ஜெயலலிதா என்றார்.

தொடர்ந்து, வருவாய்த்துறை, வேளாண்துறை, புதுவாழ்வுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

விழாவில், மக்களவை உறுப்பினர்கள் ஆர்.வனரோஜா, வெ.ஏழுமலை, எம்எல்ஏக்கள் எல்.ஜெயசுதா, சுரேஷ்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜா.சம்பத், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கண்காட்சி அரங்குகள்

விழாவில், வனத்துறை, தோட்டக்கலைத்துறை, கூட்டுறவுத்துறை,

வேளாண்துறை, வேளாண் பொறியியல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பிலும், சில தனியார் நிறுவனங்களின் சார்பிலும் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

மருத்துவ முகாம்கள், பள்ளி, கல்லூரி மாணவ-மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகளை சுற்றுலாப் பயணிகள் கண்டு மகிழ்ந்தனர். ரங்க ராட்டினம் உள்ளிட்ட தனி நபர்களின் பொழுதுபோக்கு அம்சங்களும் கோடை விழாவில் இடம்பெற்றிருந்தன.

விழா ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 29) மாலை 3 மணியுடன் நிறைவு பெறுகிறது.

**<u>குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் ஆய்வு</u>**

**அரியலூர்**:

தா. பழூர் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார்.

நடப்புப் குறுவைப் பருவத்தில் நெல் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தி உற்பத்தித் திறனைப் பெருக்க குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம் அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக திருந்திய நெல் சாகுபடிக்கான மேட்டுப்பாத்தி நாற்றங்காலும், நடவு இயந்திரம் மூலம் நடுவதற்கு தட்டு நாற்றங்காலும் அமைக்கப்படுகிறது.

தா.பழூர் வட்டாரத்தில் ஏற்கெனவே குறுவை நாற்றங்கால் அமைத்து திருந்திய நெல் சாகுபடி 90 ஏக்கரில் நடப்பட்டுள்ளது. தற்போது சுமார் 57 ஏக்கரில் நடுவதற்குரிய நாற்றங்கால் விடப்பட்டுள்ளது. மேலும் நடவு இயந்திரம் மூலம் நடுவதற்கு பாய் நாற்றங்கால் சோழமாதேவி, இடங்கண்ணி, திருபுரந்தான் தெற்கு, முட்டுவாஞ்சேரி, மற்றும் காரைக்குறிச்சி உள்ளிட்ட 10 கிராமங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் ஆய்வு செய்தார். திருபுரந்தான் கிராமத்தில் வடிவேல் என்ற விவசாயி பாய் நாற்றங்கால் விட்டு அதன் மூலம் திருந்திய நெல் சாகுபடி 7 ஏக்கரில் நடவு செய்யப்படுவதை இணை இயக்குநர் பார்வையிட்டார்.

மேலும் தா.பழூர் வட்டாரத்தில் டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை கொண்டு 4 குழுக்கள் அமைக்கவும் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது வேளாண் உதவி இயக்குநர் முரளிதரன், தா.பழூர் வேளாண் உதவி இயக்குநர் ஆர். பழனிச்சாமி, வேளாண் உதவி அலுவலர்கள் ஜோதி, ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

## <u>ரூ. 8.84 கோடியில் வேளாண் இடுபொருள்கள் அளிப்பு</u>

**மயிலாடுதுறை**:

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாயக் குழுக்களுக்கு ரூ. 8.84 கோடியில் விவசாயக் கருவிகள், வேளாண் இடுபொருள்களை மாநில மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் சனிக்கிழமை வழங்கினார்.

முதல்வரின் குறுவை சிறப்புத் திட்டம்-2014-ன் கீழ் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் வேளாண்

கருவிகள் மற்றும் விவசாயப் பொருட்கள் வழங்கும் விழா செம்பனார்கோவிலில் சனிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற இந்த விழாவுக்கு ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார். எம்எல்ஏக்கள் எஸ். பவுன்ராஜ் (பூம்புகார்), எம். சக்தி (சீர்காழி) ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் அமைச்சர் ஜெயபால் பேசியது:

வறட்சி காலத்திலும் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில்தான் விவசாயிகளுக்கும், விவசாயக் குழுக்களுக்கும் தமிழக அரசு வேளாண் இடுபொருட்கள், நடவு இயந்திரம், விசை களை மடக்கும் கருவி போன்ற வேளாண் கருவிகளை வழங்கி வருகிறது.

இதை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்றார் அமைச்சர். இதைத் தொடர்ந்து மாவட்டத்தைச் சேர்ந்த 50 விவசாயக் குழுக்களுக்கு நடவு இயந்திரம் மற்றும் விசை களை மடக்கும் கருவிகள், 2 ஆயிரம் விவசாயிகளுக்கு எச்டிபிஇ தண்ணீர் குழாய்கள் மற்றும் நெல் நுண்ணூட்ட உரங்கள், சிங் சல்பேட், ஜிப்சம், உயிர் உரங்கள், திரவ நிலை உரங்கள், நாற்றுகள் உள்ளிட்ட ரூ. 8.84 கோடி மதிப்பிலான விவசாய கருவிகள், வேளாண் இடுபொருள்களை அமைச்சர் வழங்கினார். விழாவில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஏ.கே. சந்திரசேகர், ஒன்றியக் குழுத் தலைவர்கள் கே.வி. ஜெனார்தனன் (செம்பனார்கோவில்), வேளாண்மைத் துறை அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ரவீந்திரன் வரவேற்றார். நிறைவில் செம்பனார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெற்றிவேலன் நன்றி கூறினார்.

மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க 150 பெண்களுக்கு தலா ரூ. 1 லட்சம் நிதியுதவி
நாகர்கோவில்:

மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 150 பெண்களுக்கு தலா ரூ. 1 லட்சத்துக்கான காசோலையை மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் வழங்கினார்.

இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, ஈத்தாமொழி கிளை சார்பில், பெரியகாடு மீனவர்

கிராமத்தில் மீன்பிடித் தொழிலை ஊக்கும்விக்கும் வகையில், மீனவ பெண்களுக்கு சாகர் லட்சுமி திட்டத்தின் கீழ், குறைந்த வட்டியில் நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த ஆட்சியர் எஸ். நாகராஜன், ரூ. 1 லட்சம் வீதம் 150 மீனவப் பெண்களுக்கு ரூ. 1.50 கோடிக்கான காசோலைகளை வழங்கிப் பேசியது: மீன்பிடி சார்ந்த தொழிலை ஊக்குவிக்கும் வகையில் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு தனி மனிதன் வளர்ச்சி அடைந்தால்தான் சமுதாயம் வளர்ச்சி அடைந்ததாகக் கருத முடியும். அந்த வகையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஜனவரி 2014 வரை சாகர் லட்சுமி திட்டத்தின்கீழ், 51 வங்கிக் கிளைகள் மூலமாக 875 பேருக்கு ரூ. 5.50 கோடி கடன் வழங்கியுள்ளது.

அத்துடன் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக 25 பேருக்கு வேளாண் கடன் உதவி வழங்கியுள்ளது. மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மீன்தொழில் செய்து அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஐ.ஒ.பி. ஈத்தாமொழி வங்கிக் கிளை கடன் உதவி வழங்கியுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் முதன்மை மண்டல மேலாளர் என்.எம். சிவசாமி, தலைமை மேலாளர் டி. விஸ்வநாதன், முன்னோடி வங்கி மேலாளர் பி. தேவ்நாத், மேலாளர் வர்க்கீஸ் தாமஸ், மீன்வளத் துறை துணை இயக்குநர் கணேசன், வங்கி அலுவலர்கள் வினோத்குமார், அபி ஜெசிந்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**<u>குறுவை சமுதாய நாற்றங்கால் திட்டத்தில் மாற்றம்: விவசாயிகள் வலியுறுத்தல்</u>**

**கடலூர்**:

குறுவை சமுதாய நாற்றங்கால் திட்டத்தை அரசு அறிவித்துள்ள சலுகைகளுடன் சம்பா பருவ நாற்றங்கால் திட்டமாக மாற்றி செயல்படுத்த வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், கடலூர் மாவட்ட உழவர் மன்றங்களின் கூட்டமைப்பு தலைவர் பி.ரவீந்திரன் பேசியதாவது, கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை குறுவை சாகுபடி ஜூன்

முதல் வாரத்தில் துவங்கி செப்டம்பர் மாத முதல் வாரத்தில் அறுவடை நடைபெறும். சம்பா சாகுபடி செப்டம்பர் இறுதி அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் துவங்கி ஜனவரி இறுதியில் அறுவடை நடைபெறுவது வழக்கம். இது பாரம்பரியமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அரசு அறிவித்துள்ள குறுவை சமுதாய நாற்றங்கால் திட்டம் முற்றிலும் காலம் கடந்த அறிவிப்பாக கருதுகிறோம். அண்மைக் காலமாக ஆழ்குழாய் கிணறு வசதி கொண்ட விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி செய்து வருகின்றனர்.

அந்த விவசாயிகள் ஏற்கெனவே குறுவை சாகுபடி செய்து, தற்போது பயிர்கள் பூக்கும் தருவாயில் உள்ளது.

தற்போது ஆழ்குழாய் கிணறுகள் மூலம் சமுதாய நாற்றங்கால் அமைத்து கால்வாய்கள் மூலம் தண்ணீர் கிடைக்கப் பெற்று நடவுப் பணிகள் துவக்கப்பட்டால் அறுவடை நடைபெறும் காலத்தில் தொடர் மழையால் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனால் அரசு அறிவித்துள்ள குறுவை சமுதாய நாற்றங்கால் திட்டத்தை, சம்பா பருவ நாற்றங்கால் திட்டமாக மாற்றி செயல்படுத்த வேளாண் ஆணையரிடம் அனுமதி பெற்று, கூடுதல் பரப்பளவையும் பெற்று திட்டத்தை செயல்படுத்தினால் அதிக விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி பணியில் ஈடுபட்டு உற்பத்தியை அதிகரிக்க கடலூர் மாவட்டத்தில் வாய்ப்பு உருவாகும் என்றார் பி.ரவீந்திரன்.

## கேரை, ஓடு கனவா மீன்கள் வரத்து அதிகரிப்பு

**காரைக்கால்:**

காரைக்கால் கடல் பகுதியில் கேரை, ஓடு கனவா மீன்கள் வரத்து அதிகரித்துள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

காரைக்கால் மாவட்ட மீன்வர்கள் வலையில் அண்மைக்காலமாக ஏற்றுமதி தரம் வாய்ந்த மீன்கள் சிக்கி வருகின்றன. கடந்த சில நாள்களாக காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்துக்கு திரும்பும் படகுகளில் கேரை, ஓடு கனவா மீன்கள் அதிகம் கிடைத்து வருகின்றன.

கேரையில் சிறிய வகை பெரிய வகை உள்ளது. இப்போது பெரிய அளவிலான கேரை மீன்கள் கிடைப்பது மீனவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காரைக்காலுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்த பெரும்பாலான படகுகளில் கேரை மீன்களும், ஓடு கனவா மீன்களும் அதிகம் இருந்தன. இவைகளை முகவர்கள் அதிக விலைக்கு ஏலம் எடுத்துச் சென்றனர். கேரை மீன்கள் 10 கிலோவுக்கு அதிகமான எடையில் உள்ளன. இவை கிலோ ரூ. 150 முதல் 200 வரை விலை போனது. ஓடு கனவா கிலோ ரூ. 80 முதல் 120 என்ற விலையில் விற்கப்பட்டது.

விசைப்படகில் 3 நாள்கள் கடலில் தங்கி மீன்பிடித்து வரும்போது செலவிடும் தொகைக்கு நிகராகவே சில நேரங்களில் மீன்கள் கிடைக்கிறது.

இதுபோன்று பெரிய அளவிலான மீன்களும், ஏற்றுமதித் தரத்திலான மீன்கள் கிடைக்கும் பட்சத்தில் நல்ல லாபம் கிடைக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

**காரைக்காலில் பொய்த்துப் போன குறுவை சாகுபடி**

**காரைக்கால்**:

காவிரித் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இல்லை, நிலத்தடி நீரும் குறைந்துபோனதால் காரைக்காலில் நிகழாண்டு குறுவை சாகுபடி பொய்த்துப் போய்விட்டதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

காரைக்கால் மாவட்டத்தில் அம்பகரத்தூர், நல்லம்பல், செல்லூர், சேத்தூர் உள்ளிட்ட பகுதியில் காவிரி தண்ணீர் வரத்துக்கு முன்பே தொடங்கக் கூடியது குறுவை சாகுபடி. சுமார் 1500 ஹெக்டேர் பரப்பில் காரைக்காலில் ஒவ்வொரு ஆண்டும் இது மேற்கொள்ளப்படுகிறது.

நிகழாண்டு கோடை மழையும் இல்லை. குழாய் பாசன முறையில் மேற்கொள்ள நிலத்தடி நீர் குறைவால், திட்டமிட்டபடி குறுவை காரைக்காலில் மேற்கொள்ளப்படவில்லை.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: காரைக்காலுக்குத் தேவையான 6 டி.எம்.சி. காவிரித் தண்ணீரை பெற ஒவ்வொரு ஆண்டும் பெரும்பாடுபட வேண்டியுள்ளது. காரைக்காலில் நல்லம்பல் பகுதியில் ஏரி புனரமைக்கும் பணி நடக்கிறது. தவிர, 5 புதிய இடங்களில் ஏரி அமைப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளது. இதற்கான

நிதியை உடனடியாக ஒதுக்கி, புதிதாக ஏரிகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரித் தண்ணீர் வருவதை பயன்படுத்தியும், மழை காலங்களில் வெள்ளநீரை தேக்கிவைத்தும், ஒரு போக சாகுபடியை முறையாக செய்வதற்கும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்துத் தர வேண்டும். இதுகுறித்து புதுச்சேரி முதல்வரும், புதுச்சேரி தொகுதி மக்களவை உறுப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

**<u>தமிழகத்தில் பரவலாக மழை</u>**

**சென்னை**:தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் புதுச்சேரியில சூறாவளிக்காற்றுடன் பரவலாக மழை பெய்தது.

**<u>வேளாண் விற்பனை சங்கங்களுக்குரூ.2 கோடி செலவில் ஐந்து கிடங்குகள்</u>**

**ஈரோடு**; மாவட்டம், பவானி, சத்தியமங்கலம் வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு, 2 கோடி ரூபாய் செலவில், ஐந்து கிடங்குகள் கட்ட, கூட்டுறவு துறை அதிகாரிகள் முடிவு செய்துஉள்ளனர்.

தமிழகத்தில், 112 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் உள்ளன. இவை, ரேஷன் கடைகளை நடத்தி வருவதுடன், விவசாயிகளுக்கு விதை, உரம் போன்றவற்றையும் வழங்கி வருகின்றன.தற்போது, ஈரோடு மாவட்டத்தில், 2.20 கோடி ரூபாயில், ஐந்து சேமிப்பு கிடங்குகள் கட்ட, கூட்டுறவு துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.பவானி வேளாண் கூட்டுறவு சங்கத்திற்கு, 1.18 கோடி ரூபாயில், 2,000 டன் கொள்ளளவு கொண்ட, இரண்டு கிடங்குகள்; சத்தியமங்கலம் கூட்டுறவு சங்கத்திற்கு, 68 லட்சம் ரூபாயில், 1,000 டன் கொள்ளளவு கொண்ட, இரண்டு கிடங்குகள் கட்டடப்பட உள்ளன.மேலும்,

பெருந்துறை கூட்டுறவு சங்கத்திற்கு, 34 லட்சம் ரூபாயில், 500 டன் கொள்ளளவு கொண்ட, ஒரு கிடங்கும் கட்டப்பட உள்ளது.

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து7,382 கன அடியாக உயர்வு</u>**

**மேட்டூர்**:காவிரி நீர்பிடிப்பு பகுதியில், தீவிரம் அடைந்த மழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து, நேற்று வினாடிக்கு, 7,382 கன அடியாக அதிகரித்தது
தமிழக- - கர்நாடகா எல்லையில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், கபினி அணை நீர்வரத்து அதிகரித்தது. நிரம்பும் தருவாயில் உள்ள, கபினியில் இருந்து, தொடர்ச்சியாக, காவிரியில் நீர் வெளியேற்றப்பட்டது. இந்த நீரின் ஒரு பகுதி, மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.நேற்று முன்தினம், வினாடிக்கு, 6,525 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு, 7,382 கனஅடியாக அதிகரித்தது.
கூடுதல் நீர்வரத்தால், 26 ம் தேதி, 43.080 அடியாக இருந்த, அணையின் நீர்மட்டம் நேற்று, 45.060 அடியாகவும், 13.730 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 14.842 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. 3 நாட்களில், அணையின் நீர்மட்டம், 2 அடியும், நீர் இருப்பு ஒரு டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**<u>மரபணு மாற்ற சோயாவால் இறக்குமதிசெலவு குறையும்</u>**



**புதுடில்லி**:நவீன தொழில்நுட்பத்தில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்து, நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி செலவை குறைக்க வேண்டும் என, இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பு, மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன் சிங்கிடம் அளித்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: உலகின் சராசரி எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், கிட்டத்தட்ட 50 சதவீத பங்களிப்பை, இந்தியா கொண்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள், பருப்பு, சோளம் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், தொழில்நுட்ப செயல்திட்டத்திற்கு புத்துயிர் அளித்து, வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னர், இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, சிறப்பான கொள்கைகளால், 1992–93ம் ஆண்டில், இந்தியா, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், 97 சதவீதம் தன்னிறைவைக் கண்டது.

ஆனால்,கடந்த சில ஆண்டுகளாக, தொழில்நுட்ப செயல்திட்டத்தின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. சமையல் எண்ணெய் துறைக்கு கொள்கை முடிவுகளை அறிவிக்க, உயர் அமைப்பு இல்லாத நிலை உள்ளது.மரபணு மாற்ற சோயாவின் அறிமுகத்திற்கான சாத்தியக் கூறுகளை,அரசு ஆராய்ந்து செயல்படுத்தினால், அதன் மகசூல் அதிகரிக்கும்.

தேவைக்கேற்ப, எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தி இல்லாததால், அவை,ஆண்டுக்கு,முறையே, 1 கோடி டன் மற்றும் 30 லட்சம் டன் என்ற அளவிற்கு இறக்குமதிசெய்யப்படுகின்றன.

தற்போது,எண்ணெய் வித்துக்களின் தேவையில், 55 சதவீதம்,இறக்குமதி மூலம் பூர்த்தி செய்து கொள்ளப் படுகிறது.இதை,15–20 சதவீதமாக குறைக்க விரும்பினால், தொழில்நுட்ப செயல் திட்டத்திற்கு புத்துயிர் அளிப்பது அவசியம். மேலும், மலேசியாவில் உள்ளது போன்று, எண்ணெய் வித்துக்கள், பருப்பு ஆகியவற்றின் உற்பத்தியில் கவனம் செலுத்த,தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கன மழையால் ஸ்தம்பித்தது சென்னை**




**சென்னை** : கடந்த சில தினங்களாக, வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், நேற்று மாலை திடீரென, சென்னை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது. இதன் காரணமாக, வெப்பம் தணிந்தது.

**பொது மக்கள் அவதி** : தமிழகத்தில் சென்னை உட்பட முக்கிய நகரங்களில், தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்துக் கொண்டே வருகிறது. நேற்று முன்தினம், சென்னை, திருச்சி, வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் 40 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக வெப்பம் பதிவாகியது. கடந்த சில தினங்களாகவே, இப்பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்ததால், அனல் காற்றும் அதிகமாக இருந்தது. இதனால், பொது மக்கள் அவதிப்பட்டனர். மேற்கு திசையில் இருந்து தரைக்காற்று அதிக அளவில் வீசியதால், கிழக்கு திசை காற்று, தரைப் பகுதிக்கு வராமல் புழுக்கம் அதிகரித்தது. இதனால், இரவு நேரங்களில், குறைந்தபட்ச வெப்பநிலை கூட அதிகரித்து காணப்பட்டது.

பொதுவாக, சென்னை, திருச்சி, மதுரை, வேலூர் மாவட்டங்களில், குறைந்தபட்சம் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை, இயல்பு அளவைக் காட்டிலும், இரண்டு முதல் நான்கு டிகிரி செல்சியஸ் அதிகரித்தது.

இந்நிலையில், நேற்று மாலை நான்கு மணியளவில் சென்னை மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் வெப்பநிலை குறைந்தது. மாலை நான்கு மணியளவில்

கருமேகம் சூழ்ந்து, திடீரென கனமழை பெய்யத் துவங்கியது. இடி, மின்னலுடன் பெய்த மழையால் வெப்பநிலை கடுமையாக சரிந்தது. சுமார் இரண்டு மணி நேரம் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.இடி, மின்னலுடன் பலத்த காற்றும் வீசியதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நகரின் பல பகுதிகள் மற்றும் புறநகரில் மின் வினியோகம் தடை செய்யப்பட்டது. மழை நின்றதும் மீண்டும் மின் வினியோகம் துவங்கியது.

சென்னையை அடுத்த நெற்குன்றம், அம்பத்துார், புழல் உள்ளிட்ட பகுதிகளில், அரை மணி நேரம் பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. வடசென்னை பகுதிகளில், திருவொற்றியூர், ராயபுரம் உள்ளிட்ட பகுதிகளில், 45 நிமிடங்கள் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.மரங்கள் முறிந்து விழுந்தன இதே போல், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில், ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக கனமழை பெய்தது. இடி, மின்னலுடன், பலத்த காற்றும் வீசியதால், நகரின் சில பகுதிகளில் மரங்கள் முறிந்து விழுந்தன. சாலைகளில் தேங்கி நின்ற மழைநீரால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.வேளச்சேரி, மடிப்பாக்கம், பெருங்குடி, மேடவாக்கம், தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில், இரண்டு மணி நேரம் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. இதனால், மின் வினியோகம் தடைபட்டது. ராமாபுரம், போரூர், விருகம்பாக்கம் வளசரவாக்கம், பூந்தமல்லி, மாங்காடு, குன்றத்துார் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, கனமழை கொட்டியது. போரூர், பாய் கடை பகுதியில், கனமழை காரணமாக, 13 மாடிக் கட்டடம் புதைந்தது.

திடீர் மழை குறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது: வெப்ப சலனத்தினால் மழை பெய்துள்ளது. கடந்த சில தினங்களாக, காற்று அதிகளவில் வீசியதால், மழை பெய்யவில்லை. இன்று (நேற்று) காற்றின் வேகம் சற்று குறைந்ததால், மழை அதிகளவில் பெய்துள்ளது. அடுத்த மழை நிகழ்வுக்கான காலம், காற்றின் வேகத்தைப் பொறுத்து தான் அமையும்.இவ்வாறு,

அவர் கூறினார்.இந்நிலையில், காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், நேற்று மாலை பரவலாக, அரை மணி நேரம் பெய்த பலத்த மழையால், வெப்பம் தணிந்தது. இதனால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று மதியம் பத்து நிமிடங்கள் மழை பெய்தது.

## தண்ணீரின்றி கரும்பு காய்ந்ததால் மாடுகளை மேய்க்கும் விவசாயிகள்

**ரிஷிவந்தியம்**: வடமாமாந்தூர் கிராமத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் இல்லாததால் அப்பகுதியில் பயிரிடப்பட்ட கரும்புகள் காய்ந்துள்ளன.

ரிஷிவந்தியம் ஒன்றியம் வடமாமாந்தூர் கிராமத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைவாக உள்ளது. இதனால் இப்பகுதியில் பயிர்கள் அனைத்தும் கருகி வீணாகி வரு கின்றன. பருவ மழையும் இல்லாததால் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்றனர். பல விளைநிலங்களில் கரும்பு பயிரிடப்பட்ட சில மாதங்களிலே வளராமல் காய்ந்து விடுகிறது. போதிய அளவு தண்ணீர் இல்லாததால் பயிர்கள் செழிப்பாக வளராமல் காய்ந்து வருகின்றது. இதனால் பல விவசாய நிலங்களில் மாடுகள் கரும்பு பயிரை மேய்ந்து செல் கின்றன.

## இரு தினங்களாக மழை கரும்பு பயிர்கள் செழிப்பு

**திருக்கோவிலூர்**: திருக்கோவிலூர் பகுதியில் இரண்டு நாட்களாக சூறை காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக, வாடியிருந்த கரும்பு பயிர்கள், சாய்ந்திருந்தாலும், பசுமையுடன் காட்சியளிக்கிறது. திருக்கோவிலூர் பகுதியில் சில தினங்களாக வாட்டிய வெயிலுக்கு விடை கொடுக்கும்

வகையில் இரு தினங்களாக காற்றுடன் மழை வெளுத்து வாங்கி வரு கிறது. இது வதங்கிய கரும்பு உள்ளிட்ட விவசாய பயிர்களுக்கு புத்துயிர் ஊட்டுவதாக இருந்தது. காற்றுடன் மழை பெய்ததால் கரும்புகள் பசுமையாக செழிப்புடன் காட்சியளிக்கிறது. இது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மழை தொடர்ந்து பெய்தால் கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு புத்துயிர் கிடைப்பதுடன் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயம் தழைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**காய்கறி விலை 'கிடுகிடு' உயர்வு**

**கடம்பத்துார்**: மாவட்டத்தில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், சில வாரங்களாக காய்கறிகள் விலை உயர்ந்து வருகிறது. குறிப்பாக கொத்தமல்லி கட்டு ஒன்று 10 ரூபாய்-க்கு விற்பனையாகிறது. இதுபோல் வெங்காயம், தக்காளி, பீன்ஸ், அவரை போன்ற காய்கறிகள், கடந்த வாரத்தை விட தற்போது, கடுமையாக விலை உயர்ந்துள்ளன.தமிழகத்தில் தற்போது தோட்டப்பயிர்கள் விளைச்சல் குறைவாக உள்ளதால், பெரும்பாலும் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா ஆகிய பகுதிகளிலிருந்து காய்கறிகள் வருவதால், காய்கறி விலை அதிகரித்து வருகிறது. மேலும், டீசல் விலையும் அவ்வப்போது உயர்ந்து வருவதாலும், காய்கறி விலை உயர்ந்து வருகிறது. நேற்று ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி காய்கறிகள் விலை (ஒரு கிலோ): (பழைய விலை அடைப்புக் குறிக்குள்) வெங்காயம் ரூ.32 (12), தக்காளி ரூ.15 (8), கத்தரி ரூ.20 (8), மாங்காய் ரூ.20 (10), முள்ளங்கி ரூ.22 (12), கருணை ரூ.32 (16), அவரை ரூ.56 (30), பீன்ஸ் ரூ.78 (40), கேரட் ரூ.48 (20), பீட்ரூட் ரூ.28 (12), இஞ்சி ரூ.120 (60), பச்சை மிளகாய் ரூ.28 (12).

**செதில் பூச்சி தாக்கி கருகும் மல்லிகை**

**கும்மிடிப்பூண்டி**: வெண்நிற செதில் பூச்சி தாக்கி, மல்லிகை அரும்பு விடாமல் கருகுவதால், தோட்ட உரிமையாளர்கள் வேதனையில் உள்ளனர்.

கும்மிடிப்பூண்டி அருகே, தண்டலச்சேரி, ஐயர்கண்டிகை, ஆர்.என்.கண்டிகை, ஏ.என்.குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான மல்லிகை தோட்டங்கள் உள்ளன. தற்போது அதிக அளவில் மல்லிகை பூக்கள் அரும்பு விடும் பருவம். இந்த நேரத்தில், அப்பகுதி மக்களால் பேச்சு வழக்கில் கூறப்படும் 'பேன் விழுதல்' என்னும் நோயால் மல்லிகை செடிகள் பாதிக்கப்பட்டு பூக்கள் அரும்பு விடாமல் கருகுவதால், தோட்ட உரிமையாளர்கள் வேதனையில் உள்ளனர். பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகளுக்கு பின்னால் வெண் நிறத்தில் கண்ணுக்கு புலப்படாத பூச்சிகளால் இந்த நோய் பாதிப்பு ஏற்படுகிறது. ஆரம்ப கட்டத்தில் நோயை கட்டுப்படுத்த தவறினால், அதிலிருந்து செடிகளை காப்பது அவ்வளவு எளிதல்ல என, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தண்டலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த மல்லிகை தோட்ட உரிமையாளர் ராஜா கூறுகையில், 'ஒன்றரை மாதமாக இந்நோய் தாக்கப்பட்டு, எங்கள் தோட்டத்தில் அரும்பு வராமல் கருகி வருகின்றன.

பல இடங்களில் இருந்து மருந்து வாங்கி தெளித்தும் எந்த பயனும் இல்லை' என, தெரிவித்தார்.

இதுகுறித்து, கும்மிடிப்பூண்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறுகையில், 'இந்நோய் செதில் பூச்சியால் ஏற்படும் பாதிப்பு. உடனடியாக சம்பந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலர்களை அனுப்பி, அதற்கு உரிய மருந்தை பரிந்துரை செய்து நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவித்தார்.

## புதுப்பேட்டை சங்கத்தில் ரூ. 70 லட்சம் மஞ்சள் ஏலம்

**ஆத்தூர்**: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 70 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம், மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, வீரகனூர், தம்மம்பட்டி மட்டுமின்றி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த, 600 விவசாயிகள், 2,000 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

சேலம், ஈரோடு, கோவை, திருச்சியை சேர்ந்த, 15 மஞ்சள் வியாபாரிகள் கலந்து கொண்டனர். விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 7,739 ரூபாய், குறைந்தபட்சம் 4,139 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 6,699 ரூபாய், குறைந்தபட்சம் 4,039 ரூபாய், பனங்காளி அதிகபட்சம் 16 ஆயிரத்து 99 ரூபாய், குறைந்தபட்சம் 8,999 ரூபாய் என, விற்பனையானது. மொத்தம், 70 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

## மரவள்ளி கிழங்குக்கு மவுசு: விலை உயரும்! வேளாண் பல்கலை ஆரூடம்

**கோவை** : 'ஜூன் முதல் ஆகஸ்ட் மாதங்களில் அறுவடையாகும், மரவள்ளி கிழங்குக்கு நல்ல விலை கிடைக்கும்' என, கோவை வேளாண் பல்கலை அறிவித்துள்ளது.

தமிழகத்தில், மரவள்ளிக்கிழங் கின் மொத்த சாகுபடி பரப்பு, 1.57 லட்சம் எக்டர். நாமக்கல், தருமபுரி, சேலம், விழுப்புரம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில், மரவள்ளிக்கிழங்கு அதிகம் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில், இம்மாவட்டங்களின்

பங்களிப்பு 76 சதவீதம்.மேலும், திருச்சி, கடலூார், கன்னியாகுமரி, கரூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. மரவள்ளிக்கிழங்கின் வரத்து தொழிற்சாலைகளுக்கு ஜூலை முதல் ஏப்ரல் வரை கிடைக்கிறது. குறிப்பாக, நவம்பர் முதல் பிப்ரவரி வரை வரத்து அதிகரிக்கும்.இம்மாதங்களில் நிலவும் குளிர், அதிகளவு மாவு சத்து அதிகரிக்க ஏதுவாக இருக்கிறது. கொல்லிமலை மற்றும் பச்சமலை பகுதிகளிலிருந்து ஜூன் கடைசியிலிருந்து, ஆகஸ்ட் வரை கிடைக்கிறது. மேலும், கருமாந்துறையிலிருந்து ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையிலும், சேலம், நாமக்கல், அரூர், தருமபுரி மற்றும் ஈரோடு போன்ற பகுதிகளிலிருந்து நவம்பர் முதல் மார்ச் வரையிலும் கிழங்குகள் கிடைக்கின்றன.மரவள்ளிக்கிழங்கு அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்ற பாதுகாப்பான பயிராகவும், நல்ல வருமானத்தை ஈட்டி தரும் பயிராகவும் இருப்பதால் விவசாயிகள் பயிரிட விரும்புகின்றனர். ஓராண்டில், இரண்டு மடங்கு அளவு, விலை உயர்ந்துள்ளது. இதனால், 2013-14ல் மரவள்ளிக்கிழங்கின் உற்பத்தி நிலையாக இருந்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம், கடந்த, 14 ஆண்டுகளாக மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படும் சேலம் மற்றும் சுற்றியுள்ள சமவெளி பகுதிகளில், விளைந்த கிழங்கின் விலையை ஆய்வு செய்ததில், மரவள்ளிக்கிழங்கு நல்ல விலை கிடைக்கும் என தெரிவித்துள்ளது.தற்போது, மரவள்ளிக் கிழங்கின் (மாவுச்சத்து 25 சதவீதம்) விலை, கிலோவுக்கு, 10 முதல் 12 ரூபாய் வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த மரவள்ளிக்கிழங்கை விற்கலாம் என, பரிந்துரைத்துள்ளது.

## அவரை சாகுபடியில் விவசாயிகள் விளைச்சல் அதிகரிப்பால் மகிழ்ச்சி

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். இங்கு, மா, தென்னை, மஞ்சள், கரும்பு, நெல், தக்காளி உள்ளிட்ட

பயிர்களை செய்வதில், கடந்த காலங்களில் விவசாயிகள் ஆர்வமாக இருந்தனர். மாவட்டத்தில், பருவமழை ஏமாற்றி வருவதால், பெரும்பலும், இவற்றை அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால், பெரும்பலான விவசாயிகள் மாற்றுத் தொழிலுக்கு செல்ல துவங்கினர். இதில், பல விவசாயிகள் குறைந்தளவு தண்ணீரில் சந்தையில் நல்ல வரவேற்பு, வருமானம் கிடைக்கும், கொத்தவரை காய், அவரைக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட காய்கறிகளையும், பட்டன் ரோஸ் உள்ளிட்டவற்றை சாகுபடி செய்ய துவங்கி உள்ளனர்.

குறிப்பாக, தினசரி சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகளில் காய்கறிகளுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைப்பதுடன், விலையும் கிடைத்து வருகிறது. இதனால், தர்மபுரி மாவட்டத்தில் அவரைக்காய் சாகுபடி உற்பத்தி அதிகரித்து, 150 ஹெக்டேர் பரபரப்பளவில், தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, அதகபாடியை சேர்ந்த விவசாயி மாக்கன் கூறியதாவது:

நான் கடந்த, இரு ஆண்டுகளாக செடி அவரை சாகுபடி செய்கிறேன். தற்போது, அரை ஏக்கர் பரப்பளவில், செடி அவரை சாகுபடி செய்துள்ளேன். விதை நட்ட, இராண்டாவது மாதத்தில் இருந்து அவடைக்கு வர துவங்கிறது. தொடர்ந்து, நான்கு மாதம் அவரை காய்க்கிறது.

வாரத்துக்கு, ஒரு முறை, 200 கிலோ வரை அறுவடை செய்யப்படுகிறது. அவரைக்காய்க்கு சந்தையில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளதால் சராசரியாக, 15 ரூபாய் விலை கிடைக்கிறது. நான்கு மாதத்துக்கு, 16 அறுவடை மூலம், 3,200 கிலோ கிடைக்கிறது.

இதன் மூலம், 48 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. பராமரிப்பு செலவுகள் போக, 30 ஆயிரம் ரூபாய் மேல் வருமானம் கிடைக்கிறது. இது, பிற பயிர்களை சாகுபடி செய்வதை விட, நல்ல வருமானமாக உள்ளதுடன், வாரந்தோறும் வருமானம் கிடைப்பதால், அதன் மூலம் பிற பயிர் சாகுபடி பணிகளையும் மேற்கொள்ள முடிகிறது, என்றார்.

## "கோகோ' விலை அதிகரிப்பு விவசாயிகள் ஆர்வம்

**தேனி**: மாவட்டத்தில் கோகோ அதிக விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு வருவதால், இதனை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில் தற்போது 800 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு ஹெக்டேருக்கு, தோட்டக்கலைத்துறை 12 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. விவசாயிகளிடம் கோகோ கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், மூன்றாண்டு சர்வதேச விலை சராசரி, இந்திய மார்க்கெட் விலை சராசரி, இதில் எது அதிகமோ அந்த விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இந்த ஒப்பந்தப்படி நடப்பு ஆண்டு விவசாயிகளிடம் இருந்து சர்வதேச நிறுவனங்கள் நிர்ணயித்த விலையை விட மூன்று மடங்கு வரை அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து வருகின்றனர். இந்த விலை உயர்வு காரணமாக விவசாயிகள் அதிக பரப்பில் கோகோ சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**கோடை வெயிலுக்கு பின்னர் சென்னையில் இடி–மின்னலுடன் கொட்டித்தீர்த்த மழை**



சென்னையில் நேற்று மாலை இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் சென்னை நகரில் கடந்த 2 மாதகாலமாக கொளுத்திய கோடை வெயிலின் வெப்பம் தணிந்து மாலையில் குளுமையை மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

கோடை வெயில் வாட்டி எடுப்பு

தமிழகத்தில் அக்னி எனப்படும் கத்திரி வெயில் மே மாதம் 4–ந் தேதி தொடங்கி 28–ந் தேதியுடன் நிறைவடைந்தது. இந்த ஆண்டு கோடையில் அதிகபட்சமாக 107 டிகிரி அளவில் வெயில் கொளுத்தியது.

அக்னி வெயில் நிறைவுபெற்ற பின்னர் வெயிலின் தாக்கம் குறையும் என எதிர்பார்த்த சென்னை நகர மக்களுக்கு அது ஏமாற்றமாக அமைந்தது. கத்திரி வெயில் முடிந்த பின்னரும் கோடை வெயிலின் தாக்கம் குறையவில்லை. மாறாக வெயில் வாட்டி எடுத்தது.

சென்னையில் திடீர் மழை

இந்த நிலையில் தான் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று காலையில் வழக்கம்போல் வெயில் வெளுத்து வாங்கியது. ஆனால் மாலை 4 மணி அளவில் திடீரென வானில் கருமேகங்கள் திரண்டு பலத்த காற்று வீசியது. அதைத்தொடர்ந்து மாலை 4.15 மணி அளவில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்யதது. இந்த மழை 5.15 மணி வரை ஒரு மணி நேரம் கொட்டியது.

இந்த மழையால் சென்னை நகரில் உள்ள பல்வேறு சாலைகளில் மழை தண்ணீர் தேங்கி நின்றது. கோடை வெப்பத்தின் பிடியில் சிக்கியிருந்த சென்னை வாசிகள் நேற்று ஒரே நாளில் பெய்த மழையால் குளுமையை அனுபவித்தனர்.

சென்னை புறநகரில் பலத்த மழை

சென்னை புறநகர் பகுதிகளான கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாக்கம், பரங்கிமலை, பழவந்தாங்கல், மடிப்பாக்கம், கீழ்கட்டளை, நங்கநல்லூர், பள்ளிக்கரணை, நீலாங்கரை, துரைப்பாக்கம், பெரும்பாக்கம், மேடவாக்கம், புழுதிவாக்கம், உள்ளகரம் போன்ற பகுதிகளில் நேற்று மாலை 4 மணி அளவில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆலந்தூர் வேம்புலிசுபேதார் தெருவில் உள்ள கால்வாய் அடைப்பு காரணமாக மழைநீர் 25–க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் புகுந்தது.

<u>மரங்கள் விழுந்தன</u>

சம்பவ இடத்துக்கு சென்ற வி.என்.பி.வெங்கட்ராமன் எம்.எல்.ஏ., மண்டல உதவி கமிஷனர் மகேசன், செயற்பொறியாளர் முரளி ஆகியோர் அடைப்பு ஏற்பட்ட கால்வாயை பார்வையிட்டு தற்காலிக கால்வாயை ஏற்படுத்தி வீடுகளுக்குள் புகுந்த தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொண்டனர்.

நங்கநல்லூர், லட்சுமிநகர், வால்டாக்ஸ் காலனி, எம்.எம்.டி.சி. காலனி உள்பட 12 இடங்களில் பலத்த மழை காரணமாக மரங்கள் முறிந்து விழுந்தன. மாநகராட்சி கவுன்சிலர் ஹேமாபரணி பிரசாத் விரைந்து சென்று சாலையில் விழுந்து கிடந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

<u>தாம்பரம்–பல்லாவரம்</u>

தாம்பரம், பல்லாவரம், பெருங்களத்தூர், சேலையூர், செம்பாக்கம், பம்மல், குரோம்பேட்டை, அணையாபுத்தூர் ஆகிய இடங்களிலும் மழை கொட்டியது. மாலை 4.15 மணிக்கு தொடங்கிய இந்த மழை மாலை 5.15 மணி வரை ஒரு மணி நேரம் நீடித்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பாய்ந்து ஓடியது. குரோம்பேட்டை பஸ் நிலையம் மற்றும் போலீஸ் நிலைய பகுதிகளில் மழை நீர் தேங்கியதால் அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>காஞ்சீபுரம்–திருவள்ளூர் மாவட்டம்</u>

காஞ்சீபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் மழை பெய்தது. இதனால் அந்த பகுதிகளில் சாலைகளில் வெள்ளம் பாய்ந்தோடியது.

திருவொற்றியூர், எண்ணூர், மணலி சுற்று வட்டார பகுதியிலும் கனமழை கொட்டியது. ஆவடி, திருநின்றவூர், பட்டாபிராம் மற்றும் பூந்தமல்லி, குன்றத்தூர், மாங்காடு, போரூர் சுற்று வட்டார பகுதிகளில் இடி–மின்னல்–காற்றுடன் கனமழை பெய்தது.

காஞ்சீபுரம் மாவட்டம் திருத்தணி மற்றும் அதன்சுற்று வட்டாரப்பகுதிகளில் நேற்று மாலை 15 நிமிட நேரம் லேசான மழை பெய்தது.

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு, ஆர்.கே. பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று நேற்று மாலை 3 மணி முதல் மாலை 3.20 மணி வரை 20 நிமிட நேரம் மழை பெய்தது. கும்மிடிப்பூண்டியில் நேற்று மாலை 2 மணி முதல் 3½ மணி வரை பலத்த மழை பெய்தது. இதேபோன்று மீஞ்சூர், பொன்னேரி போன்ற இடங்களிலும் பலத்த மழை பெய்தது. மணவாளநகர், பெரியபாளையம் ஆகிய இடங்களில் லேசான மழை பெய்தது.

மேலும் மழை பெய்ய வாய்ப்பு

தென்மேற்கு பருவமழை கர்நாடக மாநிலத்தின் தெற்கு பகுதியிலும், கேரளாவிலும் தீவிரமடைந்துள்ளது. தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, நீலகிரி, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. மற்ற சில மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்து வருகிறது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது. சென்னையை பொறுத்தவரையில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்த வானிலை நாளை (திங்கட்கிழமை) வரை நீடிக்கும் என்று கருதப்படுகிறது.

மழை அளவுகள்

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:–

தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் 6 செ.மீ., தர்மபரி மாவட்டம் மரந்தஹல்லியில் 4 செ.மீ., திருச்சி மாவட்டம் துறையூர், நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் ஆகிய இடங்களில் தலா 3 செ.மீ., சேலம், தர்மபுரி மாவட்டம் ஹரூர், கரூர் மாவட்டம்

தோகை மலை, கடலூர் மாவட்டம் தொழுதூர் ஆகிய இடங்களில் தலா 2 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**<u>சென்னையில் பலத்த காற்றுடன் கனமழை புறநகர் பகுதியில் ஐஸ் கட்டி மழை பெய்தது</u>**



**சென்னை,**

சென்னையில் நேற்று மாலை பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. புறநகர் பகுதியில் ஐஸ் கட்டி மழை பெய்தது.

**வெப்ப சலன மழை**

சென்னையில் 'கத்திரி' வெயில் காலம் முடிவடைந்த பிறகும் மக்களை கடுமையாக வெயில் வாட்டி வதைத்து வந்தநிலையில், நேற்றுமுன்தினம் மாலை வெப்ப சலனம் காரணமாக பெய்த 'திடீர்' மழை நகரையும், மக்களையும் குளிர்வித்தது. இந்தநிலையில் நேற்று காலை மழை பெய்யும் என்று எதிர்பார்த்தவேளையில் வெயில் தனது கோர முகத்தை காட்டி மக்களை சோர்வடைய செய்தது.

மதியம் 3 மணிக்கு மேல் உக்கிரத்தில் இருந்த வெயிலின் தாக்கம் மறைந்து, மாலை 4 மணியளவில் வானத்தை கருமேகங்கள் சூழ்ந்தன. அதையடுத்து இடி-மின்னலுடன், பலத்த காற்றுடன் மழை பெய்ய தொடங்கியது.

**சென்னை நகரை குளிர்வித்தது**

சென்னை எழும்பூர், வேப்பேரி, புரசைவாக்கம், கோடம்பாக்கம், தியாகராயர் நகர், பெரம்பூர், எம்.கே.பி.நகர், கொடுங்கையூர், மாதவரம் உள்பட நகரின் பல்வேறு இடங்களில் கொட்டி தீர்த்த மழையால் சாலைகளில் மழைநீர் ஆறாக ஓடியது.

தாழ்வான பகுதியில் மழைநீர் குளம் போல் தேங்கியது. பலத்த மழையுடன் காற்று பலமாக வீசியதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெரும்பாலான பகுதிகளில் மின்சார இணைப்பு நிறுத்தப்பட்டது. எம்.எம்.டி.ஏ. காலனியில் ராட்சத மரம் ஒன்று வேரோடு சாய்ந்தது. இதனால் அந்த சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பலத்த காற்றுடன் பெய்த கனமழை காரணமாக பெரும்பாலான இடங்களில் மரங்களில் கிளைகள் முறிந்தன.

**ஐஸ்கட்டி மழை**

சென்னை புறநகரில் 2-வது நாளாக நேற்றும் மழை பெய்தது. ஆலந்தூர், ஆதம்பாக்கம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் அரை மணிநேரம் மழை கொட்டியது. மீனம்பாக்கம் பகுதியில் திடீரென ஐஸ்கட்டி மழை பெய்தது. இதனால் அங்கு நின்றிருந்தவர்கள் தங்கள் மீது யாரோ கற்களை கொண்டு தாக்குவதாக நினைத்து திரும்பி பார்த்தனர்.

அதன்பிறகே ஐஸ்கட்டி மழை பெய்ததை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். சிலர் ஐஸ்கட்டிகளை கையில் எடுத்து மற்றவர்கள் மீது வீசி விளையாடினார்கள். சென்னையில் நீண்ட காலத்துக்கு பிறகு பெய்த ஐஸ்கட்டி மழையை பார்த்து அந்த பகுதி பொதுமக்கள் ஆச்சரியம் அடைத்தனர்.

இதேபோல பூந்தமல்லி, போரூர், மவுலிவாக்கம் ஆகிய பகுதிகளிலும் ஐஸ்கட்டி மழை பெய்தது.

**அம்பத்தூர்**

அம்பத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் அரை மணிநேரம் மழை பெய்தது. ஆவடி, பட்டாபிராம், திருமுல்லைவாயல், திருநின்றவூர், ராயபுரம், வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை ஆகிய பகுதிகளில் மிதமான மழை பெய்தது.

திருவொற்றியூர், மணலி ஆகிய பகுதியில் காற்றுடன் லேசான தூறல் விழுந்தது. இதனால் வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்றும் வீசியது.

**எஸ்.ஆர்.ரமணன் பேட்டி**

சென்னை உள்பட தமிழகத்தில் மழை மேலும் நீடிக்குமா? என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணனிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:-

வெப்ப சலனம் காரணமாக சென்னை உள்பட தமிழகத்தில் இன்னும் 2 நாட்கள் மழை நீடிக்கும். கடலோர மாவட்டங்களில் தரைக்காற்று சற்று பலமாக வீசும். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் வெப்பசலனம் காரணமாக தமிழகத்தில் அதிகபட்சமாக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 8 செ.மீட்டர் மழையும், காஞ்சீபுரத்தில் 7 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது. ஸ்ரீபெரும்புதூர், மதுரை மாவட்டம் சோழவந்தான், சென்னை விமானநிலையம், கோவை மாவட்டம் வால்பாறை ஆகிய இடங்களில் தலா 6 செ.மீட்டர் மழையும், தாம்பரம், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி, சென்னை டி.ஜி.பி. அலுவலகம் ஆகிய இடங்களில் தலா 5 செ.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

**திருச்சி, தேனி, தூத்துக்குடி**

திருவள்ளூர் மாவட்டம் புழல், தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, காஞ்சீபுரம் மாவட்டம் கோலப்பாக்கம் ஆகிய இடங்களில் தலா 4 செ.மீட்டர் மழையும், காஞ்சீபுரம் மாவட்டம் தரமணி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, திருவள்ளூர் மாவட்டம் செம்பரம்பாக்கம், பொன்னேரி, வடசென்னை ஆகிய இடங்களில் தலா 3 செ.மீட்டர் மழையும் பெய்துள்ளது.

சேலம், சேலம் மாவட்டம் ஏற்காடு, தேனி மாவட்டம் பெரியாறு, திண்டுக்கல், கோவை மாவட்டம் சின்னக் கல்லாறு, திருச்சி மாவட்டம் துவாக்குடி, தர்மபுரி மாவட்டம் பாலகோடு, தேனி மாவட்டம் கூடலூர், திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம், திருச்சி மாவட்டம் மணப்பாறை, திண்டுக்கல் மாவட்டம் காமாட்சிபுரம், திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கம், சோழவரம், தர்மபுரி, ஈரோடு, வேலூர் மாவட்டம் ஆம்பூர், சேலம் மாவட்டம் மேட்டூர் உள்பட இடங்களிலும் பரவலாக மழை பெய்துள்ளது.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

**ரூ.1¾ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை**



**பெருந்துறை;** வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1¾ கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 4 ஆயிரத்து 300 மூட்டைகளில் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். ஆனால் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக 3 ஆயிரத்து 767 மூட்டைகளில் இருந்த ஒரு லட்சத்து 85 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய் மட்டும் ஏலம் விடப்பட்டது.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 97 ரூபாய் முதல் 102 ரூபாய் 15 காசு வரையும், 2-ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோவுக்கு 51 ரூபாய் 10 காசு முதல் 96 ரூபாய் 25 காசு வரையும் ஆக மொத்தம் ஒரு கோடியே 80 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. கடந்த புதன்கிழமையை விட கிலோவுக்கு 75 ரூபாய் குறைந்து கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

தேங்காய் விற்பனை

பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. இதற்கு விவசாயிகள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 12 ரூபாய் முதல் 13 ரூபாய் வரையும், 2-ம் தரம் 10 ரூபாய் முதல் 11 ரூபாய் வரையும், 3-ம் தரம் 8 ரூபாய் முதல் 9 ரூபாய் வரையும் விற்பனை ஆனது. தேங்காய் மொத்தம் ரூ.16 லட்சத்துக்கு விற்பனை ஆனது. இது விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் இடையே நடந்த நேரடி தேங்காய் விற்பனை ஆகும்.

**ஏற்றுமதிக்கு உகந்த மாம்பழங்களை உற்பத்தி செய்ய நிதிஉதவி கலெக்டர் தகவல்**



**கிருஷ்ணகிரி**; மாவட்டத் தில் ஏற்றுமதிக்கு உகந்த மாம்பழங்களை உற்பத்தி செய்ய மானியத்துடன் நிதி உதவி வழங்கப்படும் என்று கலெக்டர் டி.பி.ராஜேஷ் தெரிவித் தார்.

சிறப்பு கூட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ‘மா’ உற்பத்தியை அதிகரிக்க வும், அதன்மூலம் விவசாயி களுக்கு அதிக வருவாய் கிடைக்கவும் மேற்கொள்ள வேண்டிய நட வடிக்கைகள் குறித்து மா விவசாயிகளுக்கான சிறப்பு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் கலெக்டர் பேசியதாவது:–

உற்பத்தியை அதிகரிக்க...

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க தமிழக முதல்– அமைச்சரின் ஆணையின்படி பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. குறிப் பாக தோட்டக்கலைத் துறை யில் ‘மா பரப்பினை அதிகரிக்க வும், சொட்டு நீர் பாசனம் அமைக்கவும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மா உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதியை அதிகரிக்க மா விவசாயிகளுக்கு தோட்டக் கலை இயக்கம், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் ஆகிய திட்டங்களில் இருந்து நிதி உதவி பெற்று பழுக்க வைக்கும் அறை, குளிர்பதன கிடங்கு ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்படும்.

ஏற்றுமதி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் எக்டரில் மா சாகு படி செய்யப்பட்டுள் ளது. இதில் இருந்து 4 லட்சம் மெட்ரிக் டன்கள் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் 3 லட்சம் மெட்ரிக் டன் மாங்கூழ் தயாரிக்கவும், 1 லட்சம் மெட்ரிக் டன் பழங் களாகவும் பயன்படுத்தப்படு கின்றன. 73 மாங்கூழ் தொழிற் சாலைகள் மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஏற்றுமதிக்கு தகுந்த மாம் பழங்களை உற்பத்தி செய்ய, அனைத்து தொழில் நுட்பங் களையும் தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை விவசாயி களுக்கு வழங்க வேண் டும். இவ்வாறு கலெக் டர் கூறினார். இந்த கூட்டத்தில் மா ஆராய்ச்சியாளர் டாக்டர் எட்வர்டு ராஜா, தரமான மா உற்பத்தி மற்றும் இடைபருவ மா உற்பத்தி குறித்தும், ஏற்று மதிக்கு தகுந்த மாம்பழங்களை உற்பத்தி செய்வது தொடர் பான தொழில்நுட்பங்கள் குறித்தும் விளக்கி கூறினார்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் காளியப் பன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, தோட்டக்கலை உதவி இயக் குனர் ரமேஷ் மற்றும் மா விவ சாயிகள் கலந்து கொண்டார் கள்.

## குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.8¾ கோடி நிதி ஒதுக்கீடு அமைச்சர் ஜெயபால் பேச்சு



நாகை மாவட்டத்தில் குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.8¾ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று, அமைச்சர் ஜெயபால் கூறினார். தொடக்க விழா

தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார். அதன் அடிப்படையில் பல்வேறு பொருட்களை விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன் தொடக்க விழா செம்பனார்கோவிலில் நடைபெற்றது. விழாவுக்கு நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமை தாங்கினார். எம்.எல்.ஏ.க்கள் பவுன்ராஜ், சக்தி, நாகை மாவட்ட ஊராட்சி தலைவர் சந்திரசேகர், துணைத் தலைவர் ஜெயராமன், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஆசைமணி, ஒன்றியக்குழுத் தலைவர் ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குநர் ரவீந்திரன் வரவேற்றார். அமைச்சர் ஜெயபால் விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி தொகுப்பு பொருட்களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ரூ.8 கோடியே 87 லட்சம்

தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா 2-வது பசுமைப் புரட்சித் திட்டத்தை உருவாக்கிட வேளாண்மைத்துறைக்கு சுமார் ரூ.4 ஆயிரத்து 200 கோடி ஒதுக்கீடு செய்து இதன் மூலம் சிறுகுறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானிய விலையில் பல்வேறு விவசாயப் பொருட்களையும் பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானிய விலையில் பொருட்களையும் வழங்க உத்தரவிட்டுள்ளார். தற்போது குறுவை சாகுபடி விவசாயிகள் பயனடையும் வகையில் நாகை மாவட்டத்துக்கு ரூ.8 கோடியே 87 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்.

விலையில்லா நடவு எந்திரங்கள்

அதன் அடிப்படையில் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் 50 குழுக்களுக்கு விலையில்லா நடவு எந்திரங்கள், களை எடுக்கும் கருவிகள், ஜிப்சம், உரங்கள், தண்ணீர் கொண்டு செல்லும் குழாய்கள், நாற்றுகள் உள்ளிட்ட பல்வேறுப் பொருட்களை வழங்க இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது. இதைக்கொண்டு குறுவை விவசாயிகள் நெல் மகசூல் அதிகளவு செய்ய கேட்டுக் கொள்கிறேன். தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இந்த திட்டங்களை உள்ளாட்சி பிரதிநிதிகளோடு கலந்து செய்ய வேளாண்மைத் துறைக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் விஜயபாலன், ரங்கநாதன், ஒன்றியக்குழுத் தலைவர்கள் தமிழரசன், மீனா, மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் செந்தில்நாதன், முன்னாள் ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் செம்பனார்கோவில் வேளாண்மைத்துறை இயக்குநர் வெற்றிவேலன் நன்றி கூறினார்.

**ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு மிளகாய்களை உலர்த்தி காயவைக்க மானிய விலையில் தார்பாலின்**



**ராமநாதபுரம்;** மாவட் டத்தில் மிளகாய் விவசா யிகளுக்கு மிளகாய்களை உலர்த்தி காயவைக்க நவீனமுறையில் தயாரிக் கப்பட்டு தார்பாலின் மானிய விலையில் வழங் கப்பட்டு வருகிறது.

பணப்பயிர்

ஒவ்வொரு ஆண்டும் வட கிழக்கு பருவமழையும், வைகை தண்ணீரும் கைவிட்டு நெல் விவசாயம் கைநழுவி போனா லும், இந்த மாவட்டத்தின் பணப்பயிராக கருதப்படுவது மிளகாய் விவசாயம் மட்டுமே. அந்தஅளவிற்க்கு ராமநாதபுர ம் மாவட்டத்தில் நெல் விவசா யத்தைவிட மிளகாய் விவசா யம் கடலாடி, முதுகுளத்தூர், கமுதி பகுதி விவசாயிகளுக்கு கைகொடுத்து வருகிறது. இந்த பகுதியில் விளையும் முண்டு மிளகாய் மிகுந்த காரம் உடையது என்பதால் தமிழம் மட்டுமல்லாது வெளி மாநில ங்களுக்கும் வெளிநாடுகளுக் கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வரு கிறது. ஒருசில ஆண்டுகள் தண்ணீர் இல்லாமல் நெல் லைப் போல மிளகாய் விவ சாயம் கைவிட்டாலும், பெரும் பாலான நேரங்களில் மிளகாய் இந்த மாவட்ட விவசா யிகளை காப்பாற்றியே வருகிறது.

தார்பாலின்

அந்த அளவுக்கு விவசாயி களின் முக்கிய பணப்பயிராக கருதப்படும் மிளகாய் விவசா யத்தில் பல புதிய தொழில் நுட்பங்களை புகுத்தி விவசா யிகளுக்கு அமோக

விளைச்சல் ஏற்பட வழிவகை செய்துவரும் வேளாண்துறை தற்போது மற்றொரு முயற்சியாக மிள காய் விவசாயிகளுக்கு லாபத்தை அதிகரித்து தரவும், இழப்பை தடுக்கவும் மிளகாய் உலர்த்தி காயவைக்கசோதனை முறையில் தார்பாலின் வழங் கும் முயற்சியை மேற் கொண்டு உள்ளது.

கடந்த காலங்களில் விளைச் சல்காணும் மிளகாய்களை மண்தரையில் களம்அமைத்து காயப்போடுவதும், அவற்றை பாதுகாத்து பராமரித்து வருவ தும், நல்லவிலை கிடைக் கும்போது விற்பனை செய்வ தும் விவசாயிகளின் வழக்க மாக இருந்து வந்தது.இவ்வாறு மண்களத்தில் காயப் போடு வதால் பகலில் வெயிலில் காயும் மிளகாய் இரவில் பனி காரணமாக மதமதத்து போய்விடுகிறது. மேலும் தூசி,மண்.பூச்சி, தொந்தரவுகள் போன்றவற்றால் சரியான விலைக்கு போகாமல் முழுவிளைச்சல் கிடைக்காமல் நொந்துபோய் உள்ள விவசா யிகளுக்கு பெரும் வருவாய் இழப்பை தந்துவிடுகிறது.

மாற்றுதீர்வு

இதற்கு மாற்று தீர்வாக விவசாயிகளின் வருவாய் இழப்பை தடுக்கும் வகையிலும், மிளகாய்களை பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் உலர்த்தி காய வைக்கும் வகையில்தோட் டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு நவீன தார் பாலின் வழங்கப்படுகிறது. 10 மீட்டர் நீளமும், 5மீட்டர் அகலமும் கொண்ட இந்த காட்டன் தார்பாலின் விலை ரூ.6 ஆயிரத்து 800. மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் வழங் கப்பட உள்ளஇந்த தார்பாலின் ராமநாதபுரம் மாவட்டத்தில் 625 விவசாயிகளுக்கு வழங்க இந்த ஆண்டு இலக்கு நிர்ண யிக்கப்பட்டு உள்ளது. சிறு,குறு விவசாயிகள் என அனைவருக்கும் வழங்கப்படும் இந்த தார்பாலின் கடலாடி, பரமக்குடி, நயினார்கோவில், முதுகுளத்தூர் பகுதிகளில் உள்ள மிளகாய் விவசாயி களுக்கு வழங்கப்படஉள்ளது.

நிதி ஒதுக்கீடு

இந்த திட்டத்தின்கீழ் விண் ணப்பித்து உள்ள விவசா யிகளுக்கு இதுவரை 160 தார்பாலின் மானியவிலையில் வழங்கப்பட்டு உள்ளது. தேவைப் படும் விவசாயிகள் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் அலுவல கத்தில் விண்ணப்பித்தால் உட னடியாக வழங்கப்பட்டு வரு கிறது. இந்த திட்டத்துக்காக ராமநாதபுரம் மாவட்டத் துக்கு ரூ.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள் ளது.

இந்த தகவலை ராமநாத புரம் மாவட்ட தோட்டக் கலைத் துறை துணை இயக் குனர் கங்காதரன் தெரிவித் தார். அப்போது உதவி இயக் குனர் ராஜேந்திரன் உடன் இருந்தார்.

**மேட்டூர் அணை மீன் 1 கிலோவிற்கு ரூ. 60 விலையேற்றம்**

**மேட்டூர்**; அணையில் மீன்வளத்துறை சார்பில் விடப்படும் மீன் குஞ்சுகள் குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடைந்த உடன் மீன் வளத்துறை மூலம் உரிமம் பெற்ற மீனவர்களால் பிடிக்கப்படுகிறது. இவ்வாறு மீனவர்கள் பிடிக்கும் மீன்களை மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேசமயம், மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்யும் மீன்களை ஒரு குறிப்பிட்ட அளவு, மொத்த மீன் விற்பனையாளர்களுக்கு வழங்க ஒவ்வொரு ஆண்டும் ஏலம் (டெண்டர்) விடப்படும். இதன் அடிப்படையில் இந்த ஆண்டிற்கான ஏலம் தற்போது விடப்பட்டது.

இந்த ஏலத்தின் அடிப்படையில் மீன்கள் விற்பனை விலை, கடந்த ஆண்டைவிட அதிகபட்சமாக 1 கிலோவிற்கு ரூ. 60 அதிகரித்துள்ளது. அதாவது கடந்த ஆண்டு 1 கிலோ ரூ. 115–க்கு விற்பனை செய்த முதல் ரக மீன்கள் தற்பொழுது ரூ. 175 ஆகவும், 2–ம் ரக மீன்கள் ஒரு கிலோ ரூ. 105–ல் இருந்து ரூ. 135 ஆகவும், 3–ம் ரக மீன்கள் ஒரு கிலோ ரூ. 90–ல் இருந்து ரூ. 120 ஆகவும், 4–ம் ரக மீன்கள் ஒரு கிலோ ரூ. 75–ல் இருந்து ரூ. 100 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய விலை ஜூலை 1–ந் தேதி (செவ்வாய்கிழமை) முதல் நடைமுறைப்படுத்தப்படும் என கூறப்படுகிறது. அதிகபட்ச விலையாக கடந்த ஆண்டைவிட இந்தாண்டு முதல்ரக மீன்கள் விலை ஒரு கிலோவிற்கு ரூ. 60 விலை அதிகரித்து உள்ளதால் அசைவ உணவு சாப்பிடும் மீன் பிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.